2016 ஆகஸ்ட் 9]

முற்பகல் 10-35

வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

43—

சார் பதிவாளர் அலுவலகக் கட்டடம்

***2737 திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா :

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டையிலுள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் மதுக்கூரிலுள்ள சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதியில், பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர் அலுவலகமும், அதன் கட்டுப்பாட்டில் 12 சார்பதிவாளர் அலுவலகங்களும் உள்ளன. இவற்றில் மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகமும் ஒன்றாகும். பட்டுக்கோட்டை மாவட்ட பதிவாளர் மற்றும் மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றரைக் கோடி தொண்டர்களின் உயிர் மூச்சு, 10 கோடி தமிழர்களின் பாதுகாவலர், ஒப்பாரும் மிக்காரும் இல்லா

(மேசையைத் தட்டும் ஒலி) மாட்சிமை பொருந்திய தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகின்றேன்.

பட்டுக்கோட்டை தொகுதி, பட்டுக்கோட்டையிலுள்ள மாவட்ட பதிவாளர் அலுவலகம் மற்றும் மதுக்கூர் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் தேவை என்று நான் கேட்ட கேள்விக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். எதிர்வரும் காலத்திலாவது அதைப் பரிசீலனை செய்து, சொந்தக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச் சென்று, நிதிநிலைக்கேற்ப நிறைவேற்றித் தருவதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொன்னதைச் செய்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, சொல்லாததையும் செய்யும். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.

திரு. நா. கார்த்திக்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர், செம்மொழிக் காவலர், தமிழினத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களையும், (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களின் எழுச்சி நாயகன், இளைய சமுதாயத்தின் இதய ஏந்தல், உழைப்பின் சிகரம், அன்பிற்கினிய தளபதி அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட சிங்காநல்லூர் பகுதியிலும், பீளமேடு பகுதியிலும் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லை. வாடகைக் கட்டடத்தில் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. குறிப்பாக, சிங்காநல்லூர் பகுதியில் இருக்க வேண்டிய சார்பதிவாளர் அலுவலகம், வெகு தூரத்தில் உள்ள சிந்தாமணிப்புதூர் என்ற இடத்தில் இருக்கிறது. இதனால் பத்திரப் பதிவு செய்வதற்கு செல்கின்ற பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டு வருகின்றார்கள். ஆகவே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட, வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலத்தில், இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிங்காநல்லூர் தொகுதியில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான நிலத்தில் சார்பதிவாளர் அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்று கேள்வி எழுப்பியுள்ளார்கள். இதற்கு முந்தைய வினா தொடுத்த உறுப்பினருக்கு அளித்த பதிலையே இதற்கும் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்வருகின்ற காலங்களில், நிதி நிலைக்கேற்ப, அந்தப் பகுதியில் கட்டடங்களின் முக்கியத்துவத்தை அறிந்து, அதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். சுதர்சனம் அவர்கள்.*

திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமெங்கும் வாழும் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர், எங்களுடைய குடும்பத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களை*

வணங்கி, தமிழகத்திலே அதிகமாக மக்களைச் சந்திக்கின்ற ஒரே தலைவர், கழகத்தினுடைய பொருளாளர், (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.

முற்பகல் 10-40

மாதவரம் தொகுதியிலே, மாதவரம் சார்பதிவாளர் அலுவலகம், 28-2-2011 அன்று, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே திறக்கப்பட்டது. அது ஒரு வாடகைக் கட்டடத்திலே கடந்த ஐந்தரை ஆண்டுக் காலமாக இயங்கி வருகிறது. வருடத்திற்கு சுமார் 10,000 பதிவுகள் நடைபெறுகின்ற அந்த சார்பதிவாளர் அலுவலகத்தில், போதுமான இடங்கள் இல்லாமல், பொதுமக்களும், அலுவலர்களும் அவதிப்படுகிறார்கள். ஐந்தரை ஆண்டுக் காலம் ஆகியும், இதுவரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படவில்லை. ஆகவே, மாதவரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்படுமா என தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாதவரம் பகுதியில் அதிகமாக பத்திரப் பதிவு நடைபெறுகிறது என்பதால், அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருக்கிறார்கள். எதிர்வருகின்ற காலங்களில், அதற்கு முக்கியத்துவம் கொடுத்து, முன்னுரிமையின் அடிப்படையில், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆவன செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.